## வகுப்பு - 10

## இயல் - 2

## கற்கண்டு

### தொகைநிலைத் தொடர்கள்

**I. சான்று தருக.**

1. வினைத்தொகை

அ. நிலம் உழுதான் ஆ. எழுஞாயிறு இ. செந்தமிழ் ஈ. சாலப்பேசினான்

2. உம்மைத்தொகை

அ. கபிலபரணர் ஆ. எழுஞாயிறு இ. மதிமுகம் ஈ. கடிநகர்

3. உவமைத்தொகை

அ. ஊறுகாய் ஆ. செம்மொழி இ. மதிமுகம் ஈ. நனிநன்று

4. பண்புத்தொகை

அ. விரிநகர் ஆ. கபிலபரணர் இ. செந்தமிழ் ஈ. கயல்விழி

5. வேற்றுமைத்தொகை

அ. நிலம் உழுதான் ஆ. தயிர்க்குடம் இ. நன்று நன்று ஈ. வட்டப்பலகை

6. உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை

அ. சல சல ஆ. பாடி இ. வந்தான் ஈ. மொழித்தொண்டு

7. இருபெயரொட்டுப் பண்புத்தொகை

அ. எழுகதிர் ஆ. ரோஜாப்பூ இ. உறுபுகழ் ஈ. வட்டத்தொட்டி

8. அன்மொழித்தொகை

அ. குண்டுப்பையன் பேசினான் ஆ. அண்ணன் தம்பி

இ. கொல்களிறு ஈ. மதுரை சென்றான்

9. இருபெயரொட்டுப் பண்புத்தொகை

அ. மலர்க்கை ஆ. மார்கழித் திங்கள்

இ. தயிர்க்குடம் ஈ. விரிமலர்

10. வினைத்தொகை

அ. வீசுதென்றல் ஆ. மதுரை சென்றாள்

இ. அண்ணன் தம்பி ஈ. சாரைப்பாம்பு

11. வேற்றுமைத்தொகை

அ. கொல்களிறு ஆ. பால் பருகினான்

இ. முறுக்கு மீசை வந்தார் ஈ. செடி கொடி

12. உவமைத்தொகை

அ. மலர்க்கை ஆ. வட்டத்தொட்டி

இ. வளர்புகழ் ஈ. செங்காந்தள்

13. உம்மைத்தொகை

அ. சிவப்புச்சட்டை பேசினார் ஆ. அண்ணன் தம்பி

இ. மோர்க்குழம்பு ஈ. அன்புச்செல்வன்

14. அன்மொழித்தொகை

அ. முறுக்கு மீசை வந்தார் ஆ. மலர்க்கை

இ. செங்காந்தள் ஈ. தேர்ப்பாகன்

15. இருபெயரொட்டுப் பண்புத்தொகை

அ. இன்மொழி ஆ. சாரைப்பாம்பு

இ. தேர்ப்பாகன் ஈ. தமிழ்த்தொண்டு

16. உருபும் பயனும் உடன்தொக்கதொகை

அ. நீர் பருகினான் ஆ. வெண்சங்கு

இ. தமிழ்த்தொண்டு ஈ. மலர்விழி

17. விரிஉவமை.

அ. தேன்மொழி ஆ. தேன் போன்ற மொழி

இ. தேன் தமிழ் ஈ. அமுதம் போன்ற மொழி

## II. நிரப்புக. :

1. தொகைநிலைத் தொடர் _______________ வகைப்படும்.

அ. நான்கு ஆ. ஐந்து இ. ஆறு ஈ. ஏழு

2. ஒரு தொடரில் வேற்றுமை உருபுகள் மறைந்து வந்து பொருள் உணர்த்துவது _______________ தொகை எனப்படும்.

அ. உருபும் பயனும் உடன்தொக்க தொகை

ஆ. வேற்றுமை

இ. வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

ஈ. வேற்றுமைத் தொகை

3. காலம் கரந்த பெயரெச்சம் _______________.

அ. வேற்றுமைத் தொகை ஆ. வினைத்தொகை

இ. பண்புத் தொகை ஈ. உம்மைத் தொகை

4. வினைப்பகுதியும் அடுத்துப் பெயர்ச்சொல்லும் அமைந்த சொற்றொடர்களிலேயே _______________ அமையும்.

அ. உம்மைத் தொகை ஆ. உவமைத் தொகை


Created by Pinkz

இ. வினைத்தொகை ஈ. அன்மொழித்தொகை

5. சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நின்று இடையில் ஆகிய என்னும் பண்பு உருபு தொக்கி வருவது ______________.

அ. பண்புத்தொகை ஆ. பண்புப் பெயர்

இ. இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஈ. வினைத்தொகை

6. உவமைக்கும் உவமேயத்திற்கும் இடையில் ஆகிய என்னும் பண்பு உருபு தொக்கி வருவது ______________.

அ. வினைத்தொகை ஆ. பண்புத்தொகை

இ. உவமைத் தொகை ஈ. உம்மைத் தொகை

7. எண்ணல், எடுத்தல் , முகத்தல், நீட்டல் என்னும் நான்கு அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வருவது ______________.

அ. உம்மைத் தொகை ஆ. பண்புத்தொகை

இ. வினைத்தொகை ஈ. வேற்றுமைத்தொகை

8. பண்பு உருபைக்கண்டறி. ______________.

அ. போன்ற ஆ. ஆல் இ. கண் ஈ. ஆகிய

9. மோர்க்குழம்பு என்பது ______________.

அ. அன்மொழித்தொகை ஆ. பண்புத்தொகை

இ. பண்புத்தொடர் ஈ. இருபெயரொட்டுப் பண்புத்தொகை

10. தண்ணீர்த்தொட்டி என்பது ______________.

அ. வேற்றுமைத்தொகை

ஆ. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

இ. வினைத்தொகை

ஈ. நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

11. ‘ சிவப்புச்சட்டைபேசினார் ’ ______________ வகை தொகைச்சொல்.

அ. பண்புத்தொகை ஆ. உவமைத்தொகை

ஈ. அன்மொழித்தொகை ஈ. உம்மைத் தொகை

12. ‘மதுரை சென்றார் ‘ என்ற தொடரில் ______________ அமைந்துள்ளது.

அ. வேற்றுமைத்தொகை ஆ. வினைத்தொகை

இ. உவமைத்தொகை ஈ. உம்மைத் தொகை

13. ‘மதுரை சென்றார்’ என்ற வேற்றுமைத்தொகையில் மறைந்து வந்துள்ள உருபு ______________.

அ. ஐ ஆ. ஆல் இ. கு ஈ. இன்

14. ‘வீசு தென்றல்’ என்ற தொடரில் ______________ அமைந்துள்ளது.

அ. பண்புத்தொகை ஆ. இருபெயரொட்டுப் பண்புத்தொகை

இ.உம்மைத் தொகை ஈ. வினைத்தொகை

15. கீழ்க்கண்ட தொடர்களில் ______________அமைந்துள்ளது.

அ. கொல்கயிறு ஆ. செங்காந்தள் இ. மார்கழித்திங்கள் ஈ. மலர்க்கை

16. ‘ மலர்க்கை’ என்ற தொடரில் ______________ அமைந்துள்ளது.

அ. வினைத்தொகை ஆ. உம்மைத் தொகை

இ. உவமைத்தொகை ஈ. அன்மொழித்தொகை

17. கீழ்க்கண்ட தொடர்களில் ______________ உம்மைத் தொகை ஆகும்.

அ. வீசு தென்றல் இ. அண்ணன் தம்பி

இ. சாரைப்பாம்பு **ஈ.** முறுக்கு மீசை வந்தார்

***III. கூறியவாறு செய்க.***

1. பாடி (வினைமுற்றாக்குக).

அ. பாடிய பெண் ஆ. பாடினான்

இ. பாடு ஈ. இவை மூன்றும் அல்ல

2. ஆடினாள் (வேர்ச்சொல் எழுதுக).

அ. ஆடு ஆ. ஆடிய

இ. ஆடும் ஈ. இவை மூன்றும் அல்ல

3. எழுதினாள் (வினையெச்சமாக்குக).

அ. எழுது ஆ. எழுதிக்கொண்டிருந்தாள்

இ. எழுதி ஈ. எழுதுவாள்

4. மதிமுகம் (உருவகமாக்குக).

அ. முகமதி ஆ. அழகு முகம்

இ. வட்ட முகம் ஈ. நிலவு

5. ஓடு (பெயரெச்சமாக்குக) .

அ. ஓடிய ஆ. ஓடி இ. ஓடும் ஈ. ஓடினாள்

6. செய்தான் (பலர்பாலாக்கி எழுதுக).

அ. செய்தனர் ஆ. செய்து இ. செய்த ஈ. செய்தான்

7. நான் நேற்று மதுரை சென்றேன் (எதிர்காலமாக்குக).

அ. நான் நாளை மதுரை செல்வேன் ஆ. நான் நாளை மதுரை செல்வான்

இ. நான் நேற்று மதுரை செல்வான் ஈ. நான் நேற்று மதுரை செல்கிறேன்

8. அவர் நேற்று மதுரை சென்றார் (தன்மை இடமாக மாற்றுக).

அ. நான் நேற்று மதுரை சென்றார் ஆ. அவர் நேற்று மதுரை சென்றீர்கள்

இ. நீங்கள் நேற்று மதுரை சென்றீர்கள் ஈ. நான் நேற்று மதுரை சென்றேன்

9. சதுரமான கல் (பண்புத் தொகையாக்குக).

அ. சதுரம் கல் ஆ. சதுரக்கல் இ. கல் சதுரம் ஈ. சதுரமாகிய கல்

10. கையால் தொழுது (வேற்றுமைத் தொகையாக்குக).

அ. கையால் தொழுதான் ஆ. தொழுத கை

இ. கைதொழுது ஈ. எதுவுமில்லை

11. கதிர் எழுந்தது (வினைத்தொகையாக்குக).

அ. கதிரவன் எழுந்தான் ஆ. எழுகதிர்

இ. எழுந்த கதிரவன் ஈ. எழும்கதிர்

12. விண்ணும் மண்ணும் (உம்மைத்தொகையாக்குக).

அ. விண்ணையும் மண்ணையும் ஆ. விண் மண்

இ. விண்ணாலும் மண்ணாலும் ஈ. எதுவுமில்லை

13. பைங்கொடி போன்ற இடை உடைய பெண் ஆடினாள் (அன்மொழித் தொகையாக்குக).

அ. பைங்கொடி போன்ற பெண் ஆடினாள்

ஆ. பைங்கொடி போன்ற இடை உடைய பெண்

இ. பைங்கொடி ஆடினாள்

ஈ. பெண் ஆடினாள்

14. கைமலர் (உவமைத்தொகையாக்குக).

அ. கை போன்ற மலர் ஆ. கையில் மலர்

இ. மலர்க்கை ஈ. மலர் போன்ற கை

15. முத்துப்பல் (எவ்வகைத் தொகை எனக் கூறுக).

அ. அன்மொழித் தொகை ஆ. பண்புத்தொகை

இ. வினைத்தொகை ஈ. உவமைத்தொகை

16. கயல் – விழி உடையவள் (வேற்றுமை உருபால் நிரப்புக).

அ. போல ஆ. போன்ற இ. ஆகிய ஈ. ஒப்ப

17. வேந்தர் (அளவுப் பண்புத்தொகையாக்குக).

அ. வாள்வேந்தர் ஆ. பெருவேந்தர் இ. மூவேந்தர் ஈ. சிற்றரசர்

18. வேந்தர் (உருபும் பயனும் உடன்தொக்க தொகை).

அ. வாள்வேந்தர் ஆ. பெருவேந்தர் இ. மூவேந்தர் ஈ. சிற்றரசர்

19. தாமரை (இருபெயரொட்டுப் பண்புத் தொகையாக்குக).

அ. செந்தாமரை ஆ. மலர் தாமரை

இ. தாமரை மலர் ஈ. நற்றாமரை

20. முல்லைத்திணை கருப்பொருள் தருக.

அ. குறுஞ்சுனை, நீர், காட்டாறு ஆ. கொற்றவை

இ. முருகன் ஈ. வறண்ட சுரம்

21. முல்லைத்திணை உரிப்பொருள் தருக.

அ. பிரிதல், பிரிதல் நிமித்தமும் ஆ. மலை, மலை சார்ந்த இடமும்

இ. சுரமும், சுரம் சார்ந்த இடமும் ஈ. இவை மூன்றும் அல்ல

## IV. இலக்கணக் குறிப்பு தருக.

1. அரிய மலர்.

அ. வினைத்தொகை ஆ. பெயரெச்சம்

இ. குறிப்புப்பெயரெச்சம் ஈ. போலி

2. கொடுங்கோல்.

அ. பெயரெச்சம் ஆ. வினையெச்சம்

இ. பண்புத்தொகை ஈ. உவமைத்தொகை

3. உறுதுயர்

அ. உரிச்சொல் ஆ, வினைத்தொகை

இ. உம்மைத்தொகை ஈ. உவமைத்தொகை

4. கைதொழுது

அ. உவமைத்தொகை ஆ.வினைத்தொகை

இ. மூன்றாம் வேற்றுமைத் தொகை ஈ. உம்மைத்தொகை

5. கீரி பாம்பு

அ. வினையெச்சம் ஆ. பெயரெச்சம்

இ. பண்புத்தொகை ஈ. உம்மைத்தொகை

6. தடக்கை

அ. வினைத்தொகை ஆ. வினையெச்சம்

இ. உம்மைத்தொகை ஈ. உரிச்சொல்

7. மா அல்

அ. அன்மொழித்தொகை ஆ. இரண்டாம் வேற்றுமைத்தொகை

இ. இசைநிறை அளபெடை ஈ. குறிப்புப்பெயரெச்சம்

8. மூதூர்

அ. பண்புத்தொகை ஆ. வினையெச்சம்

இ. பெயரெச்சம் ஈ. வினைத்தொகை

9. வளைஇ

அ. உவமைத்தொகை ஆ. சொல்லிசை அளபெடை

இ. செய்யுளிசை அளபெடை ஈ. பெயரெச்சம்

10. எழுகதிர்

அ. வினைத்தொகை ஆ. பண்புத்தொகை

இ. உரிச்சொல் ஈ. செய்யுளிசை அளபெடை

11. தூஉய்

அ. சொல்லிசை அளபெடை ஆ. வினைத்தொகை

இ. இன்னிசை அளபெடை ஈ. வினையெச்சம்

12. பிறைநெற்றி

அ. வினைத்தொகை ஆ. உவமைத்தொகை

இ. உம்மைத்தொகை ஈ. வினையெச்சம்

13. முத்துப்பல்

அ. உம்மைத்தொகை ஆ. பண்புத்தொகை

இ. உவமைத்தொகை ஈ. உரிச்சொல்

14. மலைவாழ்வார்

அ. ஏழாம் வேற்றுமைத்தொகை ஆ. வினைத்தொகை

இ. உரிச்சொல் ஈ. பெயரெச்சம்

15. கபிலபரணர்

அ. உவமைத்தொகை ஆ. பண்புத்தொகை

இ. உம்மைத்தொகை ஈ. வினைத்தொகை

16. வெண்ணிலவு

அ. அன்மொழித்தொகை ஆ. உவமைத்தொகை

இ. பண்புத்தொகை ஈ. பண்புப்பெயர்

17. கயல்விழி பாடினாள்

அ. அன்மொழித்தொகை

ஆ. இருபெயரொட்டுப் பண்புத் தொகை

இ. வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை).

ஈ. வேற்றுமைத்தொகை

18. கொல்களிறு

அ. வினைத்தொகை ஆ. பண்புத்தொகை

இ. உம்மைத்தொகை ஈ. உவமைத்தொகை

19. பவளவாய்

அ. பண்புத்தொகை　　ஆ. வினைத்தொகை

இ. அன்மொழித்தொகை　　ஈ. உவமைத்தொகை

20. மழைக்காலம்

அ. பண்புத்தொகை　　ஆ. இருபெயரொட்டுப் பண்புத் தொகை

இ. பண்புப்பெயர்　　ஈ. உவமைத்தொகை

21. கரும்பு தின்றான்

அ. வேற்றுமைத்தொகை　　ஆ. வேற்றுமைத்தொகாநிலைத்தொடர்

இ. வினைத்தொகை　　ஈ. உவமைத்தொகை

Pinkz Public School
Next Generation School